**D.V.O.P. 1/2017** **08.06.2018**

**ம.சா.1.சுவேதா**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனக்கும் என் கணவருக்கும் 2014 ஆம் ஆண்டியிலிருந்தே தாம்பத்திய உறவு இல்லை என்றால் சரிதான். எனது கணவர் 2014 ஆம் ஆண்டியிலிருந்து என்னுடன் தாம்பத்திய உறவு வைத்துக்கொள்ளாததால் அக்கம் பக்கம் விசாரித்தேன் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்புவைத்தது தெரியவந்து என்று கூறியுள்ளது சம்மந்தமாக என் கணவருக்கு எதிராக ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் இல்லை. 2014 ஆம் ஆண்டிலிருந்து எனக்கும் என் கணவருக்கும் சுமுகமான உறவு இல்லை என்றால் சரிதான். 2014 ஆம் ஆண்டிலிருந்து நான் எனது கணவரை பிரிந்து வரும் வரை நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தாலும் எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். குறிப்பாக யாருடன் என்னை இணைத்து என் கணவர் என்னை சந்தேகப்பட்டார் என்று கூறியுள்ளீர்களா என்றால் இல்லை. எனது குழந்தைகள் பூஜா, கவின் இருவரும் எத்தனை ஆண்டுகளாக வில்பா ஸ்கூலில் படிக்கிறார்கள் என்றால் பூஜா இந்த வருடத்துடன் 7 ஆண்டுகளும் கவின் இந்த வருடத்துடன் இரண்டு ஆண்டுகளும் படிக்கிறார்கள். அவர்கள் இருவரும் போலக்காபட்டியிலிருந்து பள்ளி பேருந்தில்தான் பள்ளிக்கு சென்று வருவார்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் பள்ளி வாகனத்தில்தான் பள்ளிக்கு சென்று வந்தார்கள் என்பதை காட்டுவதற்கு ஏதவாது ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை மொத்தமாகதான் கட்டணம் வசூலித்துக்கொள்வார்கள். எங்களது குழந்தைகள் படிக்கும் பள்ளியிலிருந்து யாராவது அழைத்து விசாரித்தால் எங்களது குழந்தைகள் எப்படி எந்த ஊரிலிருந்து பள்ளிக்கு சென்ற வந்தார்கள் என்று தெரியவரும் என்றால் சரிதான். 2014 ஆம் ஆண்டியிலிருந்தே எங்களது குழந்தைகள் உத்தப்பநாயக்கனூரில் உள்ள எனது பெற்றோர் வீட்டிலிருந்துதான் பள்ளிக்கு சென்று வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் என்னுடைய கணவர் வீட்டிலிருந்து வெளியில் வந்தபோது எந்த பொருளையும் எடுத்து வரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 1லிருந்து 3 வரையான ஆவணங்களை என்னுடைய தகப்பனார் வீட்டிலிருந்து எடுத்து வந்துதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் பாதுகாப்பிற்காக அங்கு வைத்திருந்தேன். எங்கள் திருணமத்தின்போது பீரோ மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் சீதனமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணங்களை எங்களிடமிருந்த பீரோவில் பாதுகாப்பில் வைத்திருந்திருக்கலாம் என்றால் சரிதான் என் கணவர்தான் என்னுடைய தந்தை வீட்டில் கொண்டுவந்து வைத்தார். என் தந்தை வீட்டில் நான் என் கணவர் வீட்டிலிருந்த வரும்வரை யாரும் வசிக்கவில்லை என்றால் என்னுடைய அம்மாட்சி தாத்தா அங்கு வசித்து வந்தார்கள். எனது அம்மாட்சி மற்றும் தாத்தா சொந்த ஊர் குளத்துப்பட்டி. அவர்களுக்கு அந்த ஊரில் வீடு தோட்டம் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் என்னுடைய தந்தை வீட்டில் எந்த காலத்திலும் வசித்து

வரவில்லை என்றும் 2014 ஆம் ஆண்டு விஷேசம் வைத்தபிறகு நானும் என் கணவரும் தான் என்னுடைய தந்தை வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் உத்தப்பநாயக்கனூரில் வசித்து வந்ததால்தான் ம.சா.ஆ.1 முதல் 3 ஆணவங்கள் என்னிடம் இருந்தது என்றால் சரியல்ல. என் கணவருடைய ஓட்டுநா் உரிமம் நான் வைத்திருந்து என் கணவரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் எனக்கு எதிராக சி.ஆர்.எம்.பி.எண்.3197/17 வழங்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக சீராய்வு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவா் என்னுடன் சோ்ந்து வாழ உத்தரவிடக்கோரி ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளீரா என்றால் நோட்டீஸ் அனுப்பியுள்ளேன். அந்த நோட்டீசை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். எங்கள் திருமணத்தின்போது எனக்கு 15 வயது என்றால் தெரியவில்லை. என் கணவா் என்னை அவருடன் சோ்ந்து வாழக்கோரி ஒரு அறிவிப்பு அனுப்பினாா் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பிற்கு நான்தான் தகவல் சொன்னேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் எங்கள் திருமணத்தின்போது எனக்கு 15 வயது ஆனது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த பதில் அறிவிப்பிற்கு வழக்கறிஞரிடம் தகவல் சொன்னபோது என் வழக்கறிஞா் எங்களுடைய திருணமத்தின்போது எனக்கு வயது எத்தனை என்று கேட்டாா் நான் என் அப்பாவிடம் கேட்டேன் அவா் என்னுடைய திருணமத்தின்போது 15 16 வயது இருக்குமென்று சொன்னாா். என் சாா்பாக அனுப்பப்பட்டுள்ள பதில் அறிவிப்பில் என்னுடைய தந்தை சொல்லிதான் எனக்கு திருமணம் நடந்தபோது எனக்கு 15 வயது ஆனது என்று தெரியவந்ததாக கூறியுள்ளீரா என்றால் இல்லை. எனது கணவா் அனுப்பிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த விபரங்களை தெரிந்துகொண்டீரா என்றால் தெரிந்துகொண்டேன். அந்த பதில் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே இந்த மனுவை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் இல்லை. 10.01.2017 ஆம் தேதியே இந்த மனுவை நான் தாக்கல் செய்துவிட்டேன் என்றும் 28.01.2017 ஆம் தேதிதான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். இந்த மனுவில் எனக்கு 15 வயதில் திருமணம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அதுபோல் நான் குறிப்பிடவில்லை என்றும் வழக்கிற்காக குறிப்பிட்டுள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவா் பூ விவசாயம் மூலம் மாதம் ரூ.25 ஆயிரம் ரூபாயும் வட்டி தொழில் மூலம் மாதம் ரூபாய் 40 ஆயிரம் ரூபாயும் டிரைவராக வேலைபாா்ப்பதால் மாதம் ரூபாய் 25 ஆயிரம் ரூபாயும் சம்பாதிப்பதாக கூறியுள்ளதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. என் கணவா் வசதிபடைத்த கள்ளக்காதலியிடம் மாதம் 20 ஆயிரம் ரூபாய் வாங்குவதாக கூறியுள்ளீா்கள் அந்த கள்ளகாதலினுடைய பெயா் மற்றும் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என் கணவா் அதுபோல் கள்ள தொடா்பு எதுவும் வைத்திருக்காததால்தான் அந்த விபரங்களை

குறிப்பாக என்னால் கூறிமுடியவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் மது அருந்திவிட்டு என்னை கொடுமைபடுத்தியதாக ஏதாவது புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. அதுபோல் என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. நான் கட்டிட தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் தோட்டத்தில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னுடைய தந்தை மல்லிகை பூசெடி மற்றும் அவரை பயிர்செய்துள்ளார்கள். எனது அண்ணனும் அவருடைய மனைவியும் குளத்துப்பட்டியில் எனது அண்ணி வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோள் இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.